
# இனிய பிறந்தநாள் வாழ்த்து!





**செல்வி கு.பா. யாழினி!**

09-02-2026

அன்பில் நிறைந்தவளே! அருந்தவமாய்ப் பிறந்தவளே!
பொன்னெனவாய் அறிவில் பொலிந்து நிறைபவளே!
என்னினிய பெயர்த்தியே! எழும் சுடரே அறிவொளியே!
இன்றுனக்குப் **பிறந்தநாள்!** இனிதாய்ப் பத்தின் தொடக்கம்!

கன்றெனவாய்த் துள்ளியாடி கருத்துடன் படித்திடுக!
மன்றில் நீ பெருமை காண்பாய் மகிழ்வுடனே நாளும்!
தென்றலென தாத்தாவின் தேன்தமிழ் வாழ்த்திதுவே!
குன்றாப் புகழ் கொண்டும் குறைவிலா மக்களோடும்,

எஞ்ஞான்று வாழ்ந்திருக்க என்கண்ணன் அருள்வானே!
துஞ்சா மணிவிளக்காய் தூய அறிவு கொள்வாய்!
அஞ்சா நெஞ்சுரத்தை அறிவுடனே செயல்படுத்து!
மஞ்சத்தில் தாலாட்டும் மகிழ்வுடன் **பிறந்தநாள் வாழ்த்து!**



அன்புடன்,
**ஆத்தா, தாத்தா,**
**சித்தப்பா**வுடன் **கொள்ளாத்தா**